காப்பகத்தில் சேர்க்கப்படுகிறார்கள். வேலூர் பெண்கள் தனிச்சிறையில் மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்காக காப்பகமும், மூன்று வயதிற்குமேல் ஆறு வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்காக சிறுவர் காப்பகமும் உள்ளன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 122, **திரு. பி. சொக்கலிங்கம்**; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

122--

அனைத்து மருத்துவமனைகளிலும் நல்லபாம்புக் கடிக்கு மருத்துவ வசதி அளித்தல்.

*9372-**திரு. பி. சொக்கலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

விவசாயிகளில் பெரும்பாலோர் நல்லபாம்புக் கடிக்கு அடிக்கடி ஆட்படும் வாய்ப்புள்ளதால் அனைத்து மருத்துவமனையிலும் நல்லபாம்புக்கடி மருந்து வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான பாம்புகடி மருந்துகள் உட்பட அனைத்து மருந்துகளும் உடனடியாக கிடைக்க ஏதுவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. பி. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் சூணாம்பேடு அருகில் உள்ள உள்ளிவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த ஒரு விவசாயி நிலத்திற்கு இரவில் நீர்பாய்ச்சிய நேரத்தில் அவர் நல்லபாம்பு கடிக்கப்பட்டு, சூணாம்பேடு ஆரம்ப சுகாதார மையத்திற்கு கொண்டு போனபோது, அந்த மையத்தில் விஷப்பாம்பு கடிக்கு முறிவு மருந்து இல்லாமையால் மதுராந்தகம் மருத்துவமனைக்கு அவரை அழைத்துவரும் வழியிலே இறந்துவிட்டார்கள். சில மாதங்களுக்கு முன்னர், செய்யாறு கிராமத்தில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கும்போது நமது கட்சியைச் சேர்ந்த திரு. ஜகதீசன்

மாரடைப்பு ஏற்பட்டு இறந்தவருடைய மனைவி சில வாரங்களுக்கு முன்னால் புளியம்பழம் எடுக்கும்போது மாலை சுமார் 3 மணி அளவில் நல்லபாம்பு கடித்து மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் பிரிட்ஜ் சாவி இல்லாததால் உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்க முடியாமல் செங்கற்பட்டு அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும்போது வழியில் இறந்துள்ளார். (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: **

(திரு. இளம்வழுதி வெளிநடப்புச் செய்தார்)

திரு. பி. சொக்கலிங்கம்: இதை எல்லாம் போக்க, ஆரம்ப சுகாதார மையத்திலேயும், அனைத்து அரசாங்க மருத்துவமனையிலேயும் விஷபாம்பு கடி முறிவு மருந்து விரைவில் அளிக்க மாண்புமிகு தெய்வத்தாய் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரத்தில் இங்கே யார் என்ன பேசியிருந்தாலும், 'வெளியேறினார்கள்' என்பது தவிர, வேறு எதுவும் அவைக் குறிப்பில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 2 ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததைப் பற்றி இங்கே தெரிவித்தார்கள். இப்போது தேவையான அளவுக்கு மருந்துகள் எல்லா மருத்துவ மனைகளிலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ ஓராண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் அளவுக்குத் தேவை என்று கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது நாம் அதைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்போது அந்தப் பிரச்சினை இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 123, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.